# கைவினைப் பொருள் பயிற்சி பட்டறை – 24-04-2022



தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் அலைபேசி செயலியின் தலைமை பொறுப்பாளர் டாக்டர் அனுராதா கணேசன் அவர்களின் வழிகாட்டுதலில், வந்தவாசியில் ஸ்ரீ சத்புத்ரிநாயகி ஆயிர வைசிய மகளிர் சங்கம் மேற்கொண்ட கைவினைப் பொருள் பயிற்சி பட்டறை (24-04--20022) மிகச்சிறப்பாக நடைபெற்றது. பயிற்சியாளர்கள் ஜெயஸ்ரீ மற்று உஷா ஆகியோர் அன்புடனும், பொறுமையுடனும் அழகுற சொல்லிக் கொடுத்தனர். ஆயிர வைசிய மகளிரும் ஆர்வமுடன் பயிற்சி பெற்று கைவினைப் பொருள்கள் செய்து அசத்தினர். பேப்பர் பேக், துணிப்பையில் டிராயிங் மற்றும் பாக்குத்தட்டில் பெயிண்டிங் (ஆரத்தி தட்டு) என் மூன்று விதமான கைவினைக் கலைகளை கற்றுத்தந்தனர். பயிற்சி பெற்ற ஒரு சிலராவது இதை தொழிலாக செய்து வருமானம் ஈட்டுவார்கள் என்பது உறுதி. இப்பயிற்சி பட்டறையை நடத்த பொருளுதவி செய்தது மட்டுமல்லாமல், சிறப்புடன் நடத்த ஓர் ஒருங்கிணைப்பாளரையும் ஏற்பாடு செய்து கொடுத்து சிறப்பாக வழிநடத்திய டாக்டர் அனுராதா கணேசன் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தனர். மற்றும் மகளிர் சங்கங்களை தொடர்ந்து முன்னிலைப்படுத்தி வரும் தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.




Shot on OnePlus
By Arun vandavasi
4/24/22
3:38 PM


Shot on OnePlus
By Arun vandavasi
4/24/22
3:32 PM